# பண்டாரவல மாநகர சபை
# பதுளை மாவட்டம்

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

---

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

---

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 13 ஆந் திகதியும் முன்னைய 9 மாத காலப்பகுதிக்குரிய நிதிக் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 27 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூலை 05 ஆந் திகதி சபையின் நகராதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

---

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பண்டாரவல மாநகர சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பண்டாரவல மாநகர சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

---

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்படாத 11 நிர்மாணங்களின் மதிப்பீடு செய்யப்பட்ட / உடன்படிக்கை செய்யப்பட்ட தொகைக்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டமையினால் கடன்கொடுத்தோர் ரூபா 5,672,080 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 56,149,528 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 25,916,818 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இறுதி 09 மாத காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 19,705,742 ஆக இருந்தது

### 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகராதிபதியினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 23,338 | 20,113 | 4,811 |
| (ii) | வாடகை | 24,403 | 30,819 | |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,730 | 4,439 | 76,229 |
| (iv) | ஏனைய வருமானம் | 52,076 | 67,389 | |